## ஏ.ஆர்.டி. கூட்டு மருத்துவச் சிகிச்சை மையங்கள்

இந்திராகாந்தி அரசு மருத்துவக் கல்லூரி,
கதிர்காமம்,
புதுவை : 0413 – 2274579

அரசு பொது மருத்துவமனை,
காரைக்கால் : 04368 – 227751

*** Download the "NACO AIDS APP"**
*** Toll Free : 1097**

**எய்ட்ஸ் உள்ளோரை அரவணைத்திடுவோம்! அன்பு செலுத்திடுவோம்!**
**எச்.ஐ.வி. கூட்டு மருத்துவச் சிகிச்சைப் பற்றி அறிந்திடுவோம்!**
**அனைவருக்கும் எடுத்துச் சொல்வோம்!**


**பாண்டிச்சேரி எய்ட்ஸ் கட்டுபாட்டு சங்கம்**
புதுச்சேரி - 605 001.
தொலை பேசி : 0413 - 2260160, 2337000
மின் அஞ்சல் : pondicherrysacs@gmail.com


# ஏ.ஆர்.டி.

**நம்பிக்கை + (ART)**

**ஆன்ட்டி ரிட்ரோ வைரல் தெரபி**
**எச்.ஐ.வி / எய்ட்ஸ் உள்ளோருக்கான கூட்டு மருந்து சிகிச்சை**

ஏ.ஆர்.டி.

**ஆன்ட்டி ரிட்ரோ வைரல் தெரபி**
**எச்.ஐ.வி / எய்ட்ஸ் உள்ளோருக்கான கூட்டு மருந்து சிகிச்சை**

### ஏ.ஆர்.டி. - கூட்டு மருந்து சிகிச்சை பற்றி அறிந்துக் கொள்ளுங்கள்

### எச்.ஐ.வி / எய்ட்ஸ்க்குரிய மருத்துவ சிகிச்சை எது?

எச்.ஐ.வி / எய்ட்ஸ் தொற்று உள்ளவர்களுக்கு உரிய மருத்துவம் ஏ.ஆர்.டி. கூட்டு மருந்து சிகிச்சை ஆகும். இக் கூட்டு மருந்துகள் எச்.ஐ.வி உள்ளோர் எந்த நிலையில் இருந்தாலும் அவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவுகிறது. ஆனால் இம்மருந்துகள் எச்.ஐ.வி கிருமிகளை முழுமையாக அழிக்கக் கூடியவையல்ல.

### ஏ.ஆர்.டி. யின் பயன் என்ன ?

ஏ.ஆர்.டி. என்பது எய்ட்ஸ்க்கான கூட்டு மருந்து சிகிச்சை. இக்கூட்டு மருந்து சிகிச்சை எய்ட்ஸுக்கு காரணமான எச்.ஐ.வி. கிருமிகளின் பெருக்கத்தை கட்டுப் படுத்தி உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. மேலும் ஏ.ஆர்.டி. சிகிச்சை பெறும்போது சந்தர்ப்பவாத நோய்களின் தாக்கம் குறைகிறது. நமது இரத்தத்தில் உள்ள சிடி–4 எனப்படும் வெள்ளை அணுக்கள் நோய் எதிர்ப்பு சக்தியாக விளங்குகின்றது. எச்.ஐ.வி. கிருமிகள் இந்த நோய் எதிர்ப்பு சக்தியை குறைக்கும். இந்நிலையில் பல சந்தர்ப்பவாத நோய்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. இந்த நிலையைத்தான் எய்ட்ஸ் என்று கூறுவர். இந்நிலை வராமல் தடுப்பதற்காக ஏ.ஆர்.டி. என்ற கூட்டு மருந்து சிகிச்சை அளிக்கப்படுகிறது.

### எச்.ஐ.வி. உள்ளவர்கள் எப்போது இச்சிகிச்சையைத் தொடங்கலாம் ?

எச்.ஐ.வி கூட்டு மருந்தை எப்போது துவங்க வேண்டும் என்பதை ஏ.ஆர்.டி. மருத்துவரே தீர்மானிப்பது நல்லது. பொதுவாக சிடி–4 அணுக்கள் 250க்கும் குறைந்த நிலையிலும், சந்தர்ப்பவாத நோய்கள் வெகுவாகத் தாக்கத் தொடங்கும் நிலையிலும் இந்தக் கூட்டு மருத்துவத்தை துவங்கவேண்டும்.

### எச்.ஐ.வி -க்கான கூட்டு மருத்துவ சிகிச்சையைத் துவங்குவதற்குமுன் கீழ்க்கண்ட பரிசோதனைகளை செய்ய வேண்டும்.

1. இரத்தப் பரிசோதனைகள் (ஹீமோகிராம்)
2. கல்லீரல் செயல்படும் நிலைக்கான பரிசோதனை
3. சிடி–4 செல் எண்ணிக்கைக்கான பரிசோதனை
4. பெண்களுக்கு இனப்பெருக்க மண்டலப் புற்றுநோய் மற்றும் கர்ப்பம் தரித்ததற்கான பரிசோதனை
5. காசநோய்க்கான பரிசோதனை (TB)

### சிகிச்சை பயனளிக்கின்றதா என்பதை எப்படித் தெரிந்து கொள்வது ?

- பொதுவாக உடல்நிலை முன்னேற்றத்தை உணர்தலின் மூலம்.
- எடை கூடுதலின் மூலம்.
- சந்தர்ப்பவாத நோய்களின் தாக்கம் குறைதல் அல்லது முற்றிலும் நீங்குதல்
- சிடி–4 செல் எண்ணிக்கை அதிகரிப்பதன் மூலம்.
- வழக்கமான பணிகளை எப்போதும் போல் செய்ய முடிதல்

### தொடர் சிகிச்சை (Adherence) என்றால் என்ன ?

1. கூட்டு மருந்து சிகிச்சைக்கான மருந்துகளை வேளை தவறாமலும், இடையில் நிறுத்தாமலும் தொடர்ந்து உட்கொள்வதை தொடர் சிகிச்சை என்கிறோம்.
2. சிடி–4 கூட்டு மருந்து சிகிச்சை தான் சிடி–4–டி செல் எண்ணிக்கையை அதிகரித்து, சந்தர்ப்பவாத நோய்களை குறைக்கின்றது.
3. கூட்டு மருந்து சிகிச்சையினை இடையில் நிறுத்தினாலோ, வேளை தவறவிட்டாலோ சிகிச்சை பலனின்றி சிடி–4–டி செல்களின் எண்ணிக்கை குறைந்து விடும். மேலும் கிருமிகள் மருந்துகளுக்கு எதிராக செயல்படும். இதனை தடுக்க தொடர் சிகிச்சை அவசியம்.

### ஏ.ஆர்.டி.யின் நன்மைகள்

- எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்நாளை நீடிக்கிறது.
- உடல் நலம் மேம்படுகிறது.
- வாழ்க்கைத் தரம் கூடுகிறது.
- மற்றவர்களைச் சார்ந்து வாழக்கூடிய நிலை குறைகிறது.
- எச்.ஐ.வி. கிருமிகளின் எண்ணிக்கை கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்படுகிறது.
- நோய் எதிர்ப்பு சக்தியை (சிடி–4–டி செல்) அதிகரிக்கச் செய்கிறது.
- சந்தர்ப்பவாத நோய்கள் ஏற்படுவதை குறைகிறது.

### ஏ.ஆர்.டி. மையங்களின் சேவைகள்

- ஆலோசனை வழங்குதல்
- அடிப்படை / தேவையான பரிசோதனைகளை செய்தல்
- சிடி – 4 பார்த்தல்
- சந்தர்ப்பவாத நோய்களுக்கு சிகிச்சை அளித்தல்
- கூட்டு மருந்து சிகிச்சை அளித்தல்.